செய்தி வெளியீடு எண்: 182 நாள் : 02.04.2016

செய்தி வெளியீடு

**<u>உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற 39.8 டன் பாமாயில் கைப்பற்றப்பட்டது. இதுவரை ரூ.17.82கோடி பறிமுதல்</u>**

*************

தேர்தல் நடைமுறைகளையொட்டி, தமிழ்நாட்டில் தேர்தல் விதிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. தேர்தல் பறக்கும் படையும், நிலையான கண்காணிப்புக்குழுவும் மாவட்டங்களில் சோதனை செய்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

02.04.2016 வரையில் பொது சொத்தில் சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர் கட்டி சேதம் ஏற்படுத்தியதாக பெறப்பட்ட 2,00,140 புகார்களில் 1,95,357 புகார்கள் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக பெறப்பட்ட 79,996 புகார்களில் 71,822 புகார்கள் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன.

தேர்தல் தொடர்பான பறக்கும்படை 31.03.16 அன்று வாகன சோதனை மேற்கொண்டபோது, உரிய அனுமதியோ, ஆவணங்களோ இல்லாமல் வாகனம் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொண்டு சென்ற ரூ.5.50 லட்சம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொண்டு சென்ற 414 லிட்டர் மதுவகைகள் 39.8 டன் பாமாயில், திருச்சி மாவட்டத்தில் ரூ.1.50 லட்சம், திண்டுக்கல் மாவட்டத்தில் 50 சேலைகள், ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. இந்த ஒரு நாள் மட்டும் ரூ.7,00,000/– ரொக்கம் கைப்பற்றப்பட்டதால், இதுவரை ரூ.7,70,70,580/– ரொக்கம் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நிலையான கண்காணிப்புக்குழு (SST) சோதனை மேற்கொண்டபோது, திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50.00 லட்சம், தஞ்சாவூரில் கோல்டு கவரிங் நகைகள் அடங்கிய 11 பண்டல்கள், கரூரில் ரூ.1.70 லட்சம், ஈரோட்டில் ரூ.15.24 லட்சம், தருமபுரியில் ரூ.2.00 லட்சம், மதுரையில் ரூ.4.00 லட்சம், திருவள்ளூரில் 121 கிரைண்டர்கள் 4 மிக்சிகள், திருச்சி மாநகரில் ரூ.2.39 லட்சம், தேனியில் ரூ.1.08 லட்சம் என மொத்தம் ரூ.76,97,580/– ரொக்கமாக 31.3.2016 அன்று கைப்பற்றப்பட்டது. இதுவரை மொத்தம் 10,10,82,790/– ரொக்கமாக இக்குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிகள் மீறி அரசியல் தலைவர் புகைப்படத்துடன் வழங்க தயாராக இருந்த நோட்டு புத்தகங்கள், சுவர்களில் கட்சி விளம்பரம் செய்தது, போஸ்டர், பேனர், கட்சி கொடிகளை அகற்றாதது, ஒரு கட்சியினரை வேறு ஒரு கட்சியினர் நாகரீகமற்ற வார்த்தைகளால் பேசி கட்சிகளுக்கும் விரோத மனப்பான்மையை உருவாக்கியது போன்ற

காரணங்களால் கிருஷ்ணகிரி, கோவை, கரூர், சேலம் மாநகர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

*************

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி  மக்கள் தொடர்புத் துறை, சென் னை–9**